**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.963/2022**
**Prosecution Witnesses: 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிராஜா | Caste | : |
| Father Name/ Husband Name | : பாலகிருஷ்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(13.10.2025)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருமங்கலம் NGO நகரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆர்மியில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று கவின் செக்யூரிட்டி சர்வீஸ் நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2021 வது வருடம் 9 வது மாதம் தேதி நினைவு இல்லை. ஒரு நாள் கப்பலூர் மேட்டுர் டிரான்ஸ் போர்ட் நிறுவனத்திற்கு நான் மனோகரன் என்ற நபரை செக்யூரிட்டியாக அனுப்பி வைத்தேன். அவருக்கு அங்கு நடந்தவிபத்தில் இறந்துவிட்டார்.அந்த விபத்து சம்பந்தமாக போலிசார் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். அதில் நான் கையெழுத்து போட்டேன். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் NGO நகரில் செக்யூரிட்டி சர்வீஸ் அலுவலகம் வைத்து நடத்தி வருகிறேன். எனது நிறுவனத்தில் 60 பேர் பணிபுரிகிறார்கள். மேட்டுர் நிறுவனத்திற்கும் நான் தான் ஆள் போட்டிருக்கிறேன். அந்த இடத்தில் நான்

சம்பவயிடத்தில் இல்லை. அதனால் சம்பவம் பற்றி எனக்கு  தெரியாது. எனது செக்யூரிட்டி இறந்துவிட்டதால் நான் தொடர்ந்து போலிசார் விசாரணைக்கு 3 நாட்கள் சென்றேன். காவல் நிலையத்தில் தான் கையெழுத்தும் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது.

**மறுவிசாரணை**.இல்லை